ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2377/41 - 2024 මාර්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.03.28

*2377/41 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம் 3 ஆம் பிரிவின் (4) உப பிரிவின் கீழான கட்டளை**

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், மேற்குறித்த சட்டத்தின் நோக்கங்களுக்காக செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டமொன்றாக சொல்லப்பட்ட வலயத்தை பிரகடனப்படுத்தியும், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்ட கருத்திட்டத்தின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற அத்துடன் வலயத்தினுள் தாபிக்கப்பட்ட கருத்திட்டங்களாக இனங்காணப்பட்ட தனிப்பட்ட தொழில்முயற்சிகளுக்காக ஊக்குவிப்புகளை வழங்கியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசத்தில் "பிரத்தியேக புடவை தயாரித்தல் வலயம்" (இதனகத்துப் பின்னர் "வலயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொடர்பில் 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை தெளிவுபடுத்துகின்றேன்.

1. 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் வாசகம் (3) இதன் பின்வரும் பந்தியின் மூலம் இத்தால் பதிலீடுசெய்யப்படுகின்றது.

"மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் நியதிகளின்படி, இக்கட்டளைக்கான கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட விலக்களிப்புக்களானவை, இதன்கண் அடையாளம் காணப்பட்டதும் வலயத்தினுள் தாபிக்கப்பட்டதுமான செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நோக்கெல்லைக்குள் வருவதாக முதலீட்டுச் சபையினால் இனங்காணப்பட்ட தனியாள் தொழில்முயற்சிகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமெனக் குறித்துரைக்கின்றேன்"

1A - G 41678 — 05 (2024/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் வாசகம் (5) இதன் பின்வரும் பந்தியின் மூலம் இத்தால் பதிலீடுசெய்யப்படுகின்றது.

இலங்கை முதலீட்டுச் சபைக்கும் தொழில்முயற்சிக்கும் இடையேயான தனியாள் உடன்படிக்கையில் (இதனகத்துப்பின்னர் “BOI உடன்படிக்கை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) விதித்துரைக்கப்படவுள்ள ஒவ்வொரு தொழில்முயற்சிக்குமான ஊக்குவிப்புக்களை முதலீட்டுச் சபை வழங்குதல் வேண்டும்.

முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையைச் செய்வதன்மேல், தொழில்முயற்சியின் பெயர், தொழில்முயற்சியின் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கும் திகதி மற்றும் தெளிவுபடுத்தப்பட்டவாறான 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை I அமைவாக அத்தகைய தனியார் தொழில்முயற்சிக்கு வழங்கப்பட்ட முழுமையான அல்லது பகுதியளவான விலக்களிப்பு திகதி எதுவோ அத்திகதி தொழிற்பாட்டுக்கு வரும் அத்துடன் அதே திகதி தொழிற்பாட்டிலிருந்து நிறுத்தப்படும் திகதியுடன் ஏற்புடையற்பாலனவான ஊக்குவிப்புக்களின் உரிய காலப்பகுதி என்பன முதலீட்டு மேம்பாடு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் திருத்தப்பட்டவாறான 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை II வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்றின் வாயிலாக உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

3. 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் வாசகம் (5) I “அட்டவணை I” ஆக மீளப்பெயரிடப்படுகின்றது.

4. 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் விடயம் (2) இத்தால் பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றது,

(2) ஆம் விடயத்தின் i உப - விடயத்தை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்

“தொழில்முயற்சியானது இதன் அட்டவணை I இன் (6) ஆம் விடயத்தில் விதிக்கப்பட்டவாறான காலப்பகுதியொன்றுக்கு, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் கீழான சேர்பெறுமதி வரிக் (VAT) கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியானது, பின்வரும் உப - விடயம் ii மற்றும் உப - விடயம் iii இற்காக, தொழில்முயற்சி எத்தேதியன்று BOI உடன்படிக்கையைச் செய்ததோ அத்தேதியிலிருந்து தொடங்கப்படுதலும் வேண்டும்”,

5. 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் விடயம் (3) இத்தால் பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றது,

(3) ஆம் விடயத்தின் i உப - விடயத்தை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்

“தொழில்முயற்சியானது இதன் அட்டவணை I இன் (6) ஆம் விடயத்தில் விதிக்கப்பட்டவாறான காலப்பகுதியொன்றுக்கு, 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தினதும் அதனது திருத்தங்களினதும் கீழான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுக் (PAL) கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியானது, பின்வரும் உப விடயம் ii மற்றும் உப விடயம் iii இற்காக, தொழில்முயற்சி எத்தேதியன்று BOI உடன்படிக்கையைச் செய்ததோ அத்தேதியிலிருந்து தொடங்கப்படுதலும் வேண்டும்.”

6. 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் விடயம் (4) இத்தால் பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றது.

(4) ஆம் விடயத்தின் i உப - விடயத்தை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்,

“தொழில்முயற்சியானது இதன் அட்டவணை I இன் (6) ஆம் விடயத்தில் விதிக்கப்பட்டவாறான காலப்பகுதியொன்றுக்கு, சுங்கக் கட்டளைச்சட்டம் (235 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களின் கீழான சுங்க இறக்குமதித் தீர்வைக் (CID) கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியானது, பின்வரும் உப - விடயம் ii மற்றும் iii இற்காக, தொழில்முயற்சி எத்தேதியன்று முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையைச் செய்ததோ அத்தேதியிலிருந்து தொடங்கப்படுதலும் வேண்டும்”,

7. 2021, யூலை 30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் விடயம் (5) இத்தால் பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகின்றது,

(5) ஆம் விடயத்தின் i உப - விடயத்தை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்தவதன் மூலம்,

*"தொழில்முயற்சியானது இதன் அட்டவணையின் I இன் (6) ஆம் விடயத்தில் விதிக்கப்பட்டவாறான காலப்பகுதியொன்றுக்கு, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் கீழான ஆயவரிச் (CESS) கொடுப்பனவிலிருந்தும் விதிப்பனவிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியானது, பின்வரும் உப - விடயம் ii மற்றும் iii இற்காக தொழில்முயற்சி எத்தேதியன்று BOI உடன்படிக்கையைச் செய்ததோ அத்தேதியிலிருந்து தொடக்கப்படுதலும் வேண்டும்."*

8. 2021, யூலை 30 ஆந் திகதியிட்ட 2238/40 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் அட்டவணையின் விடயம் (2), விடயம் (3), விடயம் (4), விடயம் (5) இன் கீழ் ஏற்புடைய விலக்களிப்புகள் காலப்பகுதி பற்றிய மேலதிக தெளிவுபடுத்தலுக்காக அட்டவணையின் (5) ஆம் விடயத்தினை உடனடுத்து (6) ஆம் விடயமாக புதிய விடயம் ஒன்றினை உட்சேர்த்தல்

**(6) விடயம் (2), விடயம் (3), விடயம் (4), விடயம் (5) இன் கீழ் விலக்களிப்பு காலப் பகுதி**

இதற்கான அட்டவணையின் நிரல் I, நிரல் II , நிரல் III , நிரல் IV அட்டவணை I இன் முறையே விடயம் (2), விடயம் (3), விடயம் (4), விடயம் (5) இன் உப விடயம் ii உப விடயம் iii இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் கீழ் விலக்களிப்பு காலப்பகுதிகளை எடுத்துரைக்கின்றது,

| முதலீடு (ஐ. அ. டொலர் மில்லியன்) | குறைந்தபட்ச தொழில் (எண்ணிக்கை) | விலக்களிப்புக் காலப்பகுதி (ஆண்டுகள்) | | | |
|---|---|---|---|---|---|
| | | நிரல் I VAT | நிரல் II PAL | நிரல் III CID | நிரல் IV CESS |
| 10 இற்கு மேற்பட்ட அல்லது 10 இற்குச் சமமான மற்றும் 15 இனை விடக் குறைவான (≥ 10, < 15) | 150 | 5 | 5 | 5 | 5 |
| 15 இற்கு மேற்பட்ட அல்லது 15 இற்குச் சமமான மற்றும் 20 இனை விடக் குறைவான (≥ 15, < 20) | 200 | 7 | 7 | 7 | 7 |
| 20 இற்கு மேற்பட்ட அல்லது 20 இற்குச் சமமான மற்றும் 25 இனை விடக் குறைவான (≥ 20, < 25) | 300 | 8 | 8 | 8 | 8 |
| 25 இற்கு மேற்பட்ட அல்லது 25 இற்குச் சமமான மற்றும் 30 இனை விடக் குறைவான (≥ 25, < 30) | 350 | 9 | 9 | 9 | 9 |
| 30 இற்கு மேற்பட்ட அல்லது 30 இற்குச் சமமான மற்றும் 40 இனை விடக் குறைவான (≥ 30, < 40) | 400 | 10 | 10 | 10 | 10 |
| 40 இற்கு மேற்பட்ட அல்லது 40 இற்குச் சமமான மற்றும் 50 இனை விடக் குறைவான (≥ 40, < 50) | 600 | 12 | 12 | 12 | 12 |
| 50 இற்கு மேற்பட்ட அல்லது 50 இற்குச் சமமான மற்றும் 70 இனை விடக் குறைவான (≥ 50, < 70) | 700 | 15 | 15 | 15 | 15 |
| 70 இற்கு மேற்பட்ட அல்லது 70 இற்குச் சமமான மற்றும் 100 இனை விடக் குறைவான (≥ 70, < 100) | 1,000 | 18 | 18 | 18 | 18 |
| 100 இற்கு மேற்பட்ட அல்லது 100 இற்குச் சமமான மற்றும் 200 இனை விடக் குறைவான (≥ 100, < 200) | 1,400 | 20 | 20 | 20 | 20 |
| 200 இற்கு மேற்பட்ட அல்லது 200 இற்குச் சமமான (≥ 200) | 2,800 | 25 | 25 | 25 | 25 |

9. அட்டவணை I இன் (6) விடயத்தை உடனடுத்து அட்டவணை II ஆக புதிய விடயம் ஒன்றினை பின்வருமாறு உட்சேர்த்தல்,

**அட்டவணை II**

இதில் அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட தகைமைபெறுகின்ற பிரமாணத்தை நிறைவுசெய்வதற்குட்பட்டு, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டத்தின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற அத்துடன் "வலயம்" இனுள் தாபிக்கப்பட்டவாறான மற்றும் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையினை கைச்சாத்திட்டுள்ள முதலீட்டுச் சபையினால் இனங்காணப்பட்டுள்ள தொழில்முயற்சிகள், இதில் அட்டவணை 2 இல் பட்டியலிடப்பட்ட தனிப்பட்ட தொழில்முயற்சிகளுக்காக குறித்துரைக்கப்பட்டவாறு மேலே அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையில் இருந்து முழுமையாக அல்லது பகுதியாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை I : "வலயம்" இனுள் தாபிக்கப்பட்ட தொழில்முயற்சிகள் பற்றிய விபரங்கள்**

| தொடர் இல. | வர்த்தமானி அறிவித்தல் இலக்கமும் திகதியும் | தொழில்முயற்சியின் பெயர் | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்ட செயற்பாடு | தகைமை பெறுகின்ற பிரமாணம் | கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் காலம் | வர்த்தக தொழிற்பாடு தொடக்கத் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

**அட்டவணை 2, அட்டவணை 1 இல் அடையாளப்படுத்தப்பட்ட தொழில்முயற்சிகளுக்காக வழங்கப்படும் ஊக்குவிப்புகள் பற்றிய விபரங்கள்**

| தொடர் இல. | தொழில் முயற்சியின் பெயர் | விலக்களிப்பு காலம்[1] | | | | | | தொழில் வாய்ப்பு மீது வருமான வரி விலக்களிப்பு[2] | இறக்குமதி தீர்வை விலக்களிப்பு (VAT[3]/PAL[4]/CID[4]/CESS[4]) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிறுவன வருமானவரி விலக்களிப்பு | | | அந்நேரத்தில் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்புடைய 50% சலுகை நிறுவன வருமான வரி வீதம் (ஆண்டுகளின் எண்ணிக்கை) | | | | நிர்மாணம் தொடர்புபட்ட விடயங்களின் காலம் | | | மூலதன பொருட்கள் (பொறித் தொகுதி, இயந்திரம், உபகரணம்)[4] | | | மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி செயன்முறை தொடர்புபட்ட நுகர்பொருட்கள் | | |
| | | ஆண்டுகளின் எண்ணிக்கை | தொடக்கத் திகதி | முடிவடையும் திகதி | ஆண்டுகளின் எண்ணிக்கை | தொடக்கத் திகதி | முடிவடையும் திகதி | | ஆண்டுகளின் எண்ணிக்கை | தொடக்கத் திகதி | முடிவடையும் திகதி | ஆண்டுகளின் எண்ணிக்கை | தொடக்கத் திகதி | முடிவடையும் திகதி | ஆண்டுகளின் எண்ணிக்கை | தொடக்கத் திகதி | முடிவடையும் திகதி |
| 1 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

ரணில் விக்கரமசிங்க,
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு,
2024, மாச்சு 21.

[1] பின்வருவன ஊடாக ஈட்டப்படும் வருமானத்திற்கான வரிவிடுமுறை மற்றும் சலுகைக்காலம் முடிவடைந்த பின்னர்,

*i.* ஏற்றுமதிகளாக கொள்ளப்பட்டவை உள்ளடங்கலாக ஏற்றுமதிகள், அந்நேரத்தில் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்புடைய சலுகை நிறுவன வருமான வரி வீதம் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

*ii.* உள்நாட்டுச் சந்தைக்கான வேறு விற்பனைகள் வாயிலாக இறக்குமதி பிரதீடு, அந்நேரத்தில் தயாரிப்பாளர்களுக்கு ஏற்புடைய நிறுவன வருமான வரி வீதம் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

[2] வருமான வரி விலக்களிப்பு கணித்தல் நோக்கங்களுக்காக தொழில்முயற்சியின் வெளிநாட்டு ஊழியர்கள், வலயத்தில் தொழில் முயற்சியிலிருந்தான இலாபங்கள் மற்றும் பெறுகைகளிலிருந்து தோன்றுகின்ற வருமான வரியிலிருந்து மாத்திரம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

[3] தொழில் முயற்சிக்கான பிணையக்குதப் பரப்பிலிருந்து (சுங்கம் அல்லது முதலீட்டுச் சபை) கொள்வனவுகள் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் சேர்பெறுமதி வரி நிருவாக முறைமையுடன் (உ-ம் SVAT) பதிவுசெய்துள்ள ஆட்களிடமிருந்தான வழங்கல் உள்ளடங்கலாக அனைத்து இறக்குமதிகள் மீதும்.

[4] பிணையக்குதப் பரப்பிலிருந்து (சுங்கம் அல்லது முதலீட்டுச் சபை) கொள்வனவுகள் உள்ளடங்கலாக அனைத்து இறக்குமதிகள் மீதும்

[5] கருதப்பட்ட ஏற்றுமதிகள், அத்துடன் உள்நாட்டு சந்தைக்கான விற்பனைகள் வாயிலாக இறக்குமதி பிரதியீடு உள்ளடங்கலாக இருவகையான உற்பத்திகளினதும் பயன்பாட்டுக்காக

EOG *03 - 0225*